DECEMBER 2023 **P/ID 35330/PTL4W**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. அழகியல் நோக்குடையது அறிவியலா? கலையா?

2. தத்துவத்திற்கும் அறிவியலுக்கும் இடையிலான வேறுபாடு யாது?

3. இடுகுறிப் பெயர் எவ்வாறு அமையும்?

4. 'தருக்கவாத முறை' என்றால் என்ன?

5. 'Descriptive method'- தமிழாக்குக.

6. தொல்காப்பியர் இலக்கியத்தை எவ்வாறு வகைப்படுத்தினார்?

7. 'உள்ளுணர்வு ஆய்வு நெறி' யாது?

8. வினா நிரலை எவ்வாறு ஆக்கலாம்?

9. 'தரவுத் தெரிவு உத்தி' குறித்து நீர் அறிவன யாவை?

10. வரலாற்று நோக்கின் பண்பு யாது?

11. தகவல் களங்கள் யாவை?

12. ஆய்வேட்டின் முன்னுரையில் இடம் பெறவேண்டியவை யாவை?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. ஆய்தல் என்றால் என்ன? விளக்குக.

14. ஆராய்ச்சிக்குக் கற்பனை தேவைப்படுமா? தெளிவுபடுத்துக.

15. 'தகவலாளர்களுக்கு நன்றி பாராட்ட வேண்டும்' - விளக்குக.

16. ஆய்வின் கருதுகோள் எவ்வாறு இயலும்?

17. சங்க இலக்கியம் இயற்கையை எவ்வாறு படம்பிடிக்கிறது?

18. துணைநூற்பட்டியலை எவ்வாறு அழைக்கலாம்?

19. பின்னிணைப்பு எதற்கு?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. ஒன்றை முழுமையாக அறிய முயலுதல் தத்துவம் ஆகுமாற்றைத் தெளிவுபடுத்துக.

21. ஆய்வாளருக்குத் தேவையான தகுதிகளைப் பட்டியலிடுக.

22. உரைகள் கண்ட ஆய்வுமுறைகளை எடுத்துரைக்க.

23. ஆய்வேட்டின் அமைப்பு எவ்வாறு இயலும்?

24. மனித உறவை மேம்படுத்துவதாக ஆய்வு அமையவேண்டியதை வலியுறுத்துக.

———————